## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## O.S.No.163/2025

12.03.2026 வா.சா.1 திரு. முத்து குமார்

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு ஜான்சன், மதுரை வீரன் ஆகிய சகோதரர் உள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி என சகோதரி என்றால் சரிதான். எனது சகோதரர் ஜான்சன் எனக்கு அண்ணன் வேண்டும் என்றும் அவருக்கு திருமணம் ஆன பின்னர் இன்றில் இருந்து சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் அதற்கு முன்பே இறந்து இருப்பார். எனது சகோதரர் மதுரை வீரன் இறந்து 3 மாதம் இருக்குமா என்றால் 2023 ம் வருடம் இறந்தார். எனக்கு ஒரு ஆண், பெண் குழந்தை உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு ஒரு ஆண், ஒரு பெண் குழந்தை உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் இறந்து 10 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான். பிரதிவாதி ஆதவற்ற நிலையில் தான் உள்ளார் என்றால் சரியல்ல. அவரது மகன் ஆசிரியராக உள்ளார்.
2. எனது அம்மா செட்டில்மெண்ட் ஆவணம் 03.08.2009 ம் தேதி எனது பெயரில் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுக்கும் போது எனது அம்மாவிற்கு உணவு, உடை, இருப்பிடம் கொடுப்பேன் என நான் உறுதி கூறிய பின்னர் தான் எனக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் எனது அம்மா என்னுடன் இருந்தார் நான் தான் அவருக்கு உணவு, உடை எல்லாம் கொடுத்தேன் அவர் இறக்கும் வரை என்னுடன் தான் இருந்தார். நான் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்த பின்னர் நான் எந்த விதமான பராமரிப்பையும் எனது அம்மாவிற்கு தொடர்ந்து 6 ஆண்டுகள்

செய்யாமல் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் கடைசி காலம் வரை பராமரித்தேன்.

3. நான் சரிவர எனது தயாருக்கு வேண்டிய பராமரிப்பு பணியை செய்யவில்லை என்பதால் 23.01.2015 ம் தேதி எனக்கு ஏற்கனவே எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை எனது அம்மா ரத்து செய்து விட்டார் என்றால் எனது தாயாரை நான் தான் பராமரித்தேன் ஆனால் ரத்து செய்துவிட்டார். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் பெயர் எழுத மட்டும் தான் தெரியும்.
4. வாசாஆ.2 ஆவணத்தில் எனது அம்மா எனக்கு விருப்பம் இல்லாத காரணத்தினால் சொத்தும் என்னுடைய சுவாதீனத்தில் இருக்கும் காரணத்தால் சொத்து வரி என் பெயரில் இருப்பதால் 03.08.2009 ல் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் மேற்படி பத்திரம் எனக்கு 2025 ம் ஆண்டு தான் தெரியும்.
5. செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யும் போதே எனது அம்மா என்னிடம் சொல்லிவிட்டு தான் ரத்து செய்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் 3 ஆண்டுகளுக்குள் செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்த பின்னர் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றும் அதை மறைக்க வேண்டும் என்பதற்காக 2025 ம் ஆண்டு தான் செட்டில்மெண்ட் ரத்து பற்றிய விவரம் தெரியும் என பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
6. பிராதில் நான் 4 ½ லட்சம் செலவு செய்து செட்டில்மெண்ட் மூலம் எனக்கு கிடைத்த சொத்தில் கட்டிடம் கட்டியுள்ளேன் என்று சொல்லியுள்ளது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. என் உழைப்பில் வீடு கட்டினேன். என் தாயாரும், பிரதிவாதியும் கஷ்டப்பட்டு வீடு தபசில் சொத்தில் கட்டினார்கள் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தை எனது அம்மா சுயசிந்தனையோடு, மனப்பூர்வமாக

எந்தவிதமான வலுக்கட்டாயம் இன்றி எழுதிக் கொடுத்தார் என்றால் நான் இல்லாத நேரத்தில் எனது தாயாரை வேளாங்கன்னி கோவில் கூட்டு போகிறோம் என்று சொல்லி ஒரு 22 ம் தேதி கூட்டி சென்று விட்டு 23 ம் தேதி சாயந்திரம் வீட்டில் விட்டார்கள். நான் எனது அம்மாவிடம் கோவிலுக்கு போனீர்களா என்று கேட்ட போது கோவிலுக்கு போகவில்லை என் அக்காவீட்டில் இருந்தேன் என்று சொன்னார்.

7. செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்ட பினனர் 7 ஆண்டுகள் கழித்து தான் என் தாயார் இறந்தார் என்றால் 2023 ம் வருடம் இறந்தார். 7 ஆண்டு காலத்தில் எனது அம்மா அவரது மகளோ, பேத்தியோ, தன்னை வேளாங்கன்னி அழைத்து செல்வதாக சொல்லி பத்திரத்தை ரத்து செய்ய சொன்னதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் என் அம்மா ரத்து செய்ததை பற்றி சொல்லவில்லை.
8. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதி மீது என் தாயாரை வேளாங்கன்னிக்கு அழைத்து சென்று மூளை சலவை செய்து செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ததாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் 2025 ம் ஆண்டு எனக்கு தெரியும். நானும், எனது உடன் பிறந்த இறந்து போன சகோதரர்களும் வசதி இல்லாமல் இருந்தோம் என்றால் சரியல்ல. நான் கூலி வேலை பார்த்து உழைத்து வீடு கட்டினேன்.
9. பிராது சொத்தில் எனக்கு சட்டப்படியான உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனது தாயார் செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ததால் தபசில் சொத்தில் எனக்கு முழு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் பிராதில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. என் தாயாருக்கு உள்ள 4 வாரிசுகளில் நானும் ஒருவர் என்றால் சரிதான். எனக்கு தபசில் சொத்தில் 4 ஒரு பங்கு தான் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

10. தபசில் சொத்தில் பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 12.03.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.03.12 17:20:03 +0530

Principal District Munsif,
Tirunelveli.